# நாட்டு நலப்பணித் திட்டம்

## அலகு-1

**சத்பவன திவாஸ்** எனப்படும் மத நல்லிணக்க தினம் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த தினமான ஆகஸ்ட் 20 ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. அதனை முன்னிட்டு ஆகஸ்ட் 18 ம் தேதி 11.00 மணியளவில் நம் கல்லூரி வளாகத்தில் உறுதியேற்பு நிகழ்வு நடைப் பெற்றது.

### நோக்கம்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் உயரிய கொள்கையான அனைத்து மதங்களுக்கும் சம உரிமை என்ற தன்மையை பல்வேறு இன வகுப்பு கலாச்சார மற்றும் மதங்களின் சங்கமமான இந்திய திருநாட்டில் நிலை நாட்டுவதைக் குறிக்கும் வகையில் இந்நாள் கொண்டாடப் படுகிறது.

### நிகழ்வு

இந்நாளில் அரசு அலுவலகங்களில் மத நல்லிணக்கத்துக்கான பின்வரும் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் **விவேகானந்த கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டம் அலகு** -1 சார்பாக கல்லூரி முதல்வர் மற்றும் கல்வி இயக்குனர் அவர்கள் முன்னிலையில் பேராசிரியர் மற்றும் அலுவலக உதவியாளர்கள் நிகழ்வில் கலந்துக்கொண்டு உறுதி மொழி ஏற்றனர்.

### உறுதிமொழி

"நான் சாதி, இன, வட்டார, மத அல்லது மொழி பாகுபாடு எதுவுமின்றி, இந்தியாவின் அனைத்து மக்களின் உணர்வுபூர்வ ஒற்றுமைக்கும் நல்லிணக்குத்துக்கும் பாடுபடுவேன் என்று உளமார உறுதிமொழி எடுத்துக் கொள்கிறேன். மேலும் எங்களுக்கிடையேயான அனைத்து

வேறுபாடுகளையும், வன்முறையில் ஈடுபடாமல், பேச்சுவார்த்தைகள் மூலமாகவும், அரசியலமைப்புச் சட்ட வழிமுறைகளைப் பின்பற்றியும் தீர்த்துக்கொள்வேன் என்றும் இதனால் உறுதி அளிக்கிறேன்."










